# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழா | 22 ஜூன் 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

திருஅவை - இரக்கமுள்ளது ஒருவர் ஒருவரில் இயேசுவின் திருமுகத்தைக் காண அழைப்பு

# வாழவேண்டிய ஒரு மறையுண்மை

நற்கருணை ஒரு கோட்பாடாகத் தொடங்கவில்லை. அது நம்பிக்கையின் செயலாகத் தொடங்கியது. தொடக்கால கிறிஸ்துவ சமூகங்களிலிருந்து, நம்பிக்கையாளர்கள் நன்றி செலுத்தவும், ஆசீர்வதிக்கவும் அப்பத்தைப் பிட்கவும், கிறிஸ்துவின் உடலைப் பெற்றுக்கொள்ளவும் ஒன்றுகூடினர். எனவே நற்கருணையை விளக்குவதற்குமுன் அது கொண்டாடப்பட்டது.




மிகவும் விலைமதிப்பற்ற தொடக்ககால கிறிஸ்துவ ஆவணமான டிடாச்சே (12 திருத்தூதர்கள் மூலம் நாடுகளுக்கு மீட்பர் வழங்கிய போதனை) ஒரு விரைவான பார்வையை நமக்குத் தருகிறது. கிபி 50 மற்றும் 100 ஆண்டுகளுக்கு இடையில் எழுதப்பட்ட 'நற்கருணை' என்ற வார்த்தையின் பயன்பாட்டை இதில் காணலாம். திரு இரசக் கிண்ணத்தின் மீது கைவைத்து இறைவேண்டல் செய்யும் வார்த்தைகளோடு இது தொடங்குகிறது: "எங்கள் தந்தையே, உமது ஊழியனாகிய தாவீதின் தூய திராட்சைக் கொடிக்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். அதை நீர் உம் அடியாராகிய இயேசுவின் மூலம் எங்களுக்கு தெரியப்படுத்தினீர். என்றென்றும் உமக்கே மாட்சி உண்டாவதாக."

பின்பு அப்பத்தின்மீது: "மலைகளின் மீது சிதறடிக்கப்பட்ட இந்த உடைந்த அப்பம் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரே அப்பமாக மாறியதுபோல உமது திருஅவை பூமியின் எல்லைகளிலிருந்து உமது அரசுக்குள் ஒன்று சேர்க்கப்படுவதாக"

இது மிகவும் ஒரு தெளிவான எடுத்துக்காட்டு. லெக்ஸ் ஓரெண்டி, லெக்ஸ் கிரெடெண்டி, அதாவது இறைவேண்டலின் விதிகள் என்பது நம்பிக்கையின் விதி. நாம் எவ்வாறு வழிபடுகிறோம் என்பதன் மூலம் நமது நம்பிக்கை உருவாகிறது. மேலும் நமது கோட்பாடு இறைவேண்டலின் வழியாக நாம் பெற்றுக் கொண்டவற்றிலிருந்து எழுகிறது

திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் தாம் எழுதிய சாக்ரமெண்டம் கரிடாடிஸ்(#5) இல் இவ்வாறு குறிப்பிடுகிறார். நற்கருணை "நாம் வாழவேண்டிய மறையுண்மை" மேலும் நற்கருணை மறையுண்மைக்கும் புனிதத்திற்கும் கிறிஸ்துவ அன்புடனான அதன் உறவுக்கும் இடையிலான உறவைப் பற்றிப் பேசுகிறார். " மனித உரு எடுத்த கடவுள் நம் அனைவரையும் தம்மிடம் ஈர்க்கிறார். இவ்வாறு அவரின் அளவற்ற அன்பு என்னும் சொல்லே நற்கருனைக்கான ஒரு சொல்லாக மாறியது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். மறைந்த திருத்தந்தை சொல்வது என்னவென்றால், கடவுளின் உயர்ந்த அன்பு உடல்ரீதியாக அப்பமாகவும், இரசமாகவும் வெளிப்படுத்தப்படுகிறது. இதனால் கடவுளின் அன்பு தொடர்கிறது.

விரைவில் புனிதர் பட்டம் பெறவிருக்கும் ஆசீர்வதிக்கப்பட்ட கார்லோ அகுடிஸ் இதை அங்கீகரித்தார். நவீன உலகின் இளைஞனாக, நற்கருணையின் மீது அவர் ஆழ்ந்த அன்பைக் கொண்டிருந்தார். அவர் நற்கருணை அருளடையாளங்களை இணையத்தின் வழியாக ஒரு கையேட்டை உருவாக்கினார். இது அவர்பால் பிறரை ஈர்க்க அல்ல; மாறாக இயேசுவிடம் பிறரை வழிநடத்துவதற்காக என்று அவர் ஒருமுறை கூறினார். நற்கருணை விண்ணகத்திற்கு செல்ல எனது நெடுஞ்சாலை என்றும் அவர் கூறினார். நற்கருணை மீதான அவரது அன்பு, மற்றும் அவர் எவ்வாறு வாழ்ந்தார், எவ்வாறு சேவை செய்தார், எவ்வாறு சாட்சியாக இருந்தார் என்பதை வடிவமைத்தது.

நற்கருணையை நம்புவதைவிட அதிகமாக செய்வோம். மறையுண்மையை வாழ்வதே நம் அழைத்தல் ✥

ஆதலால் நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும்போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்கள்
(1 கொரி: 11:2)

**இன்றைய இறைவார்த்தை:**

தொடக்கநூல்: 14: 18-20

திருப்பாடல்: 110: 1-4

1 கொரிந்தியர்: 11: 23-26

லூக்கா: 9: 11-17

INTERNAL CIRCULATION ONLY
BUL 25/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org